

திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், அருங்குறுக்கை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து முகாமில் பயன்பெற பயனாளிகளுக்கு உரிய ஆணைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலு, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நிர்மல்ராஜ், ஒன்றிய நிர்வாகிகள் சடகோபன், ஏழுமலை, தீனதயாளன், மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



விருதுநகரில் ஸ்ரீ சொக்கநாத சுவாமி திருக்கோயில் ஆவணி பெருந்திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற தேரோட்டம் நிகழ்ச்சியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே . எஸ். எஸ்.ஆர் .ராமச்சந்திரன் வடம் பிடித்து தொடங்கி வைத்தார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர் ஆர். சீனிவாசன், சேர்மன் சுப்பாராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. இராஜகுரு, முன்னாள் அறங்காவலர் இரத்தினக் குமார், நகர் மன்ற உறுப்பினர் முத்துராமன், சந்திரன், நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜகுரு உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செயல் அலுவலர் ராமதிலகம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்தனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா!

# கழக அலுவலகத்தில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை,செப்.5-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் 154வது பிறந்த நாளை முன்னிட்டு கழக அலுவலகத்தில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கும் நிகழ்வில் கழகத்தினர் பங்கேற்குமாறு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதன் விபரம்



உலகத் தமிழர்களால் கப்பலோட்டிய தமிழன் என்று பெருமையுடன் அழைக்கப்படுபவரும் விடுதலைப் போராட்ட வீரருமான வ.உ.சிதம்பரனாரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் திருப்பாலையில் அமைந்துள்ள கழக அலுவலக வளாகத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அன்னாரின் திருவுருவப்படத்திற்கு இன்று (05.09.2025- வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட உள்ளது

எனவே இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

### மேல்மலையனூர் ஒன்றியம் ஆத்திப்பட்டு, எதப்பட்டு ஊராட்சிகளில் நடைபெற்ற

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் ! கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

செஞ்சி, செப். 5.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் ஆத்திப்பட்டு,எதப்பட்டு ஊராட்சிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம்முகாம்நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். முகாம் கண்காணிப்பாளர் முகமது யாசின் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் தமிழ்செல்வி சம்பத்,முனியன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்ட முகாமை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

மேலும் முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம் வளத்தி ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினைஅவர் வழங்கினார்.

முகாமில் எதப்பட்டு, கரடிகுப்பம் , தாழங்குணம், ஆத்திப்பட்டு,கலத்தம்பட்டு, சொக்கநந்தல், மேல் புதுப்பட்டு, ஆகிய ஊராட்சிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஒய்வூதியம், இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை கேட்டு மனு செய்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள்ஜெய்சங்கர், சீத்தாலட்சுமி,வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராஜா, ஊராட்சி மன்ற தலைவர்கள் பாலாஜி, வள்ளி ராஜாராமன்,தனலட்சுமி முருகன், துணைத் தலைவர் புவனேஸ்வரி பெருமாள், நிர்வாகிகள் அர்ஷத்,செல்வம், ரகுராமன், ஜி.பி.எஸ். முருகன், தாகிரா அப்துல்வகாப், எஸ்.பி.சம்பத், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஏழுமலை, ஒன்றியஇளைஞர் அணிஅமைப்பாளர் மணிகண்டன்,துணை அமைப்பாளர் சக்தி வாசன், அரிமா பாஸ்கரன்,ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் அரங்கநாதன்.ஒன்றிய பிரதிநிதி முரளி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலா அனைவருக்கும் நன்றி கூறினார்.

### பொன்.ஆறுமுகம் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# நெல்லையில் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா!

## நலத்திட்ட உதவிகள் வழங்கல்! மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. – முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை, செப்.5-

திருநெல்வேலி-தென்காசி, ஒருங்கிணைந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தொ.மு.ச. சங்க பொதுச் செயலாளர் பொன். ஆறுமுகம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக நாளை (06.09.2025-சனிக்கிழமை) ஆதரவற்ற முதியோர் புது வாழ்வு இல்லம் மீனாட்சி புரம் - ஏர்வாடியில் இனிப்பு வழங்கப்படுகிறது. இனிப்பை கே. முருகன் வழங்கிட, முன்னாள் எம்.பி. விஜிலா சத்தியானந்த் மதியம் அறுசுவை உணவு மற்றும் நல உதவிகள் வழங்குகிறார்.

அதேபோல் 20.09.2025 அன்று நெல்லை, அண்ணா விளையாட்டு அரங்கம் எதிரில் பார்வை திறன் குறைவுடையோர் மேல்நிலைப் பள்ளியில் அ. தர்மன் இனிப்பு வழங்கிட நெல்லை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. மதியம் அறுசுவை உணவு மற்றும் உபகரணங்கள் வழங்குகிறார்.

அதே போன்று 20.09.2025 மாலை 6 மணிக்கு மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகம் முன்பு நெல்லை கிழக்கு மாநகரச் செயலாளர் ஏ.எல்.பி. தினேஷ் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்க, தஞ்சை தெற்கு பகுதி செயலாளர் பி.சுப்பிரமணியன் முன்னிலை வகிக்க, மத்திய மாவட்டக் கழக பொருளாளர் வண்ணை இரா. சேகர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். நிகழ்ச்சியை நெல்லை முத்தையா, சி.பா. ராவணன் தொகுத்து வழங்குகின்றனர்.

நலத்திட்ட உதவிகளை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் மு. அப்துல் வகாப் வழங்குகிறார். தி. முருகானந்தம் நன்றி கூறுகிறார்.

# அமெரிக்க அதிபர் டிரம்பிடம் - மீண்டும் அடிபணிந்த மோடி!

**அ**மெரிக்காவின் இந்தியா மீதான 50% வரிவிதிப்பு, இந்திய ஏற்றுமதியின் முதுகெலும்பை முறிக்கும் அதிபர் டிரம்ப் அவர்களின் செயலை கை கட்டி வேடிக்கை பார்க்கும் ஒன்றிய மோடி அரசு!

கொங்கு மண்டலமாம், திருப்பூரின் வாழ்வாதாரமாக விளங்கும் , ஜவுளி ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பை, கண்டும் காணாமல் இருக்கும், ஒன்றிய "எஜமானர்களை" கண்டிக்க மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டுகோள் கூட விடுக்கத் தயங்கும் பழனிச்சாமி!!

அறிவார்ந்தவர்கள்

தேவை…அவை இல்லாதவர்கள் அல்ல!

'தேவை ஓர் Maran..

(Moron's) அல்ல' என்கிற தலைப்பில் சமூகவலைதள ஆர்வலர் விக்னேஷ் ஆனந்த் அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-

தமிழாக்கம்:
**வே. கௌதமன்,**
மாநிலத் துணை செயலாளர்,
கழக விளையாட்டு
மேம்பாட்டு அணி.



**இ**ந்தியாவின் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சராக (1999-2002) இருந்த முரசொலி மாறன், சியாட்டிலிலும் (1999) தோஹாவிலும் (2001) நடந்த உலக வர்த்தக அமைப்பின் (WTO) மாநாடுகளில் குறிப்பி டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தினார், இது இந்தியாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்தி, வளரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாத்தது.

அவரது முக்கிய சாதனைகளில் பின்வருவன அடங்கும்:

**வளரும் நாடுகளின் குரல்:** சியாட்டில் மாநாட்டில், வளர்ந்த நாடுகளின் ஒருதலைப்பட்ச வர்த்தகக் கொள்கைகளுக்கு (G7/G8) எதிராக வளரும் நாடுகளை ஒன்றிணைத்து, அவர்களின் வர்த்தக உரிமைகளை வலியுறுத்தினார். தோஹாவில், அவர் WTO ஒப்பந்த ஏற்றத்தாழ்வுகளை சவால் செய்தார், வளரும் நாடுகளின் குரல்களுக்கு முன்னுரிமை அளித்தார், அவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தினார் மற்றும் விவசாயம், தொழில் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளில் (IPR) பேரம் பேசும் சக்தியை மேம்படுத்தினார்.

**விவசாய மானியங்களுக்கு எதிர்ப்பு:** வளர்ந்த நாடுகளின் விவசாய மானியங்கள் மற்றும் வர்த்தகத்தை சிதைக்கும் நடைமுறைகளை மாறன் எதிர்த்தார், இது வளரும் நாடுகளில் விவசாயிகளுக்கு பாதகமாக இருந்தது. அவரது முயற்சிகள் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து விவசாயப் பொருட்களுக்கு நியாயமான சந்தை அணுகலைப் பெற்றுத் தந்தன.

**அறிவுசார் சொத்துரிமைகள் (IPR) மற்றும் மருந்துகளுக்கான அணுகல்:** உலக வர்த்தக அமைப்பின் TRIPS ஒப்பந்தத்தின் கீழ் காப்புரிமை விதிகளை தளர்த்துவதற்காகவும், மலிவு விலையில் மருந்து உற்பத்தியை செயல்படுத்துவதற்காகவும், வளரும் நாடுகளில் ஏழை மக்களுக்கு அணுகலை மேம்படுத்துவதற்காகவும் மாறன் வாதிட்டார்.

**உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தங்களின் மறுஆய்வு:** வளரும் நாடுகளுக்கு பாதகமான உருகுவே சுற்று ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய அவர் வலியுறுத்தினார், அவை பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைக்கவும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை வழங்கின.

**தோஹாவில் இந்தியாவின் தலைமை:** மாறன் இந்தியாவை வளரும் நாடுகளின் தலைவராக நிலைநிறுத்தினார், சீனாவின் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினரை ஆதரித்தார் மற்றும் வளர்ந்த நாடுகளின் பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினார், மூன்றாம் உலக நாடுகளின் பேச்சுவார்த்தை சக்தியை வலுப்படுத்தினார்.

**மூன்றாம் உலக நாடுகளுக்கான நன்மைகள்:**

**நியாயமான வர்த்தக வாய்ப்புகள்:** மாறனின் முயற்சிகள் நியாயமான உலகளாவிய சந்தை போட்டியை உறுதி செய்தன.

**மருந்துகளுக்கான அணுகல்:** TRIPS தளர்வுகள் ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் மலிவு விலையில் மருந்து அணுகலை மேம்படுத்தின.

**வளரும் நாடுகளின் ஒற்றுமை:** அவரது தலைமை ஒரு வலுவான WTO கூட்டணியை வளர்த்தது, பேரம் பேசும் சக்தியை அதிகரித்தது.

**உள்நாட்டு தொழில்களின் பாதுகாப்பு:** அவரது கொள்கைகள் வளரும் நாடுகளுக்கு பொருளாதார சுயாட்சியைப் பாதுகாத்தன.

**தற்போது 2025 இல், தொலைநோக்கு பார்வை இல்லாத திறனற்ற ஒன்றிய அரசு, பேச்சுவார்த்தைத் திறன்கள் இல்லாமை மற்றும் ராஜதந்திரமின்மை காரணமாக பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு மீண்டும் அடிபணிந்தது.**

### கழக முப்பெரும் விழா! கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம்

# குளித்தலை சட்டமன்றத் தொகுதி - செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கரூர். செப்.5.

கரூரில் செப்டம்பர் 17ம் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் திரளாக பங்கேற்குமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செப்டம்பர் 17ம் தேதி அன்று கரூரில் கழக முப்பெரும் விழா நடைபெறுகிறது. முப்பெரும் விழாவை முன்னிட்டு கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராய புரம், குளித்தலை சட்டமன்ற தொகுதிகளில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

செப்டம்பர் 5 ம்தேதி (இன்று) மாலை 6 மணிக்கு அரவக்குறிச்சி தொகுதியில் சின்னதாரா புரம் சிவ செல்விமஹால், செப்டம்பர் 6ம் தேதி கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மாலை 6மணிக்கு உப்பிடமங்கலம் சக்தி மஹால். 7ம்தேதி மாலை 5 மணிக்கு குளித்தலை சட்டமன்ற தொகுதியில் அய்யர்மலை சுபம் மஹால், 9 ம்தேதி மாலை 6 மணிக்கு கரூர் சட்டமன்ற தொகுதியில் கரூர் பிரேம் மஹால் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

மேற்கண்ட செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட செயலாளர் வி. செந்தில்பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,வேம்பார் தெற்கு ஊராட்சி,பச்சையாபுரம் கிராமம் சமுதாய நலக்கூடத்தின் மேற்புறம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.20லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதி செந்தூர்பாண்டியன், கழக உறுப்பினர்கள் உட்பட கிராம பொது மக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் சிம்மணபுதூர் மற்றும் பேராம்பட்டு ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ.துவக்கிவைத்தார்.மாவட்டஆட்சியர்சிவ.சௌந்தரவள்ளி,ஒன்றியசெயலாளர்கள்கே.ஏ.குணசேகரன்,அ.முருகேசன்,கே.ஏ.மோகன்ராஜ் மற்றும் திருமுருகன், தசரதன், சாந்தி, முருகன், மலர் தண்டபாணி, மாரியம்மாள் , ராமமூர்த்தி, தாமோதரன் உடனுள்ளனர்.